குறிப்பு : இதன் தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புகள் தனித்தனியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 1723/28 - 2011 සැප්තැම්බර් 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.09.15

**1723/28 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை**

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு  பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை

எனது குறிப்பு இல. : எல்டீ/04/03/10/2011/பீசீ/01.
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: டீஎஸ்/ஜேஎப்/எல்ஏ/2010/01.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளை இடுகின்றேன்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
இல. 80/5, "கொவிஜன மந்திரய",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2011.08.23.

அட்டவணை

1. காணி எடுத்தல் உத்தியோகத்தர் : பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம்.

2. காணியின் விபரம் : வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில், சுண்டுக்குளி கிராமத்தில் அமைந்துள்ள, யாழ்ப்பாண மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2011.05.22 ஆம் திகதிய யா/ஜேஎப்/2011/29 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு 'ஏ' எனக் காட்டப்பட்ட சுமார் 0.0765 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு :

01. **துண்டு 'ஏ' - நாகரிகன் வளவும் குமரன் வளவும் - விஸ்தீரணம்: 0.0765 ஹெக்டயார்**

வடக்கு : ஏ-9 வீதி ; கிழக்கு : தாமோதரம் பிள்ளையின் மனைவியான நாகம்மாவுக்குச் சொந்தமான காணி ; தெற்கு : கந்தையா செல்ல துரைக்குச் சொந்தமான காணி ; மேற்கு : ரெஜினோல் ராஜதுரை அரியநாயகத்திற்குச் சொந்தமான காணி.

09 - 1341